**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.No.53/2024**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சத்யா | க/பெ.: | லேட். மணிகண்டன் |
| கிராமம்: | சித்தாய்மூர் | தாலுக்கா: | திருக்குவளை |
| மதம்: | இந்து | தொழில்: | வீட்டு குடித்தனம் |
| வயது: | 23 | முகவரி: | சித்தாய்மூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 31.10.2025.

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் மனுதாரரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 10.09.2024 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.2 | 23.05.2023 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் RC Book | நகல் |
| ம.சா.ஆ.3 | 31.03.2024 முதல் 30.03.2025 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலீசி | நகல் |
| ம.சா.ஆ.4 | 15.02.2027 | 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் | நகல் |
| ம.சா.ஆ.5 | -- | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.6 | 10.09.2022 | 2ம் மனுதாரரின் பிறப்புச்சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.7 | -- | 2ம் மனுதாரர் பெயரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.8 | -- | 3ம் மனுதாரர் பெயரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.9 | -- | 4ம் மனுதாரர் பெயரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.10 | 11.09.2024 | இறந்து போன மணிகண்டனின் பிரேத பரிசோதனை அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.11 | 11.11.2024 | மணிகண்டனின் இறப்புச்சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.12 | 21.09.2024 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.13 | 18.10.2024 | இறந்துபோன மணிகண்டன் அமர்ந்து சென்ற வாகனத்தின் மோட்டார் ஆய்வாளர் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.14 | 10.09.2024 | குற்ற இறுதி அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.15 | 09.10.2024 | இறந்துபோன மணிகண்டனின் வாரிசு சான்று | நகல் |
| ம.சா.ஆ.16 | -- | இறந்து போன மணிகண்டன் என்பவரின் ஆதார் அட்டை | நகல் |

மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இந்த விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் மாதம் ரூ.35,000/- வருமானம் ஈட்டி வருகிறார் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் இருசக்கர வாகன பழுது பார்க்கும் கடையில் என்ன வேலை பார்த்து வந்தார் என்று குறிப்பிட்டு எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் பயணம்

செய்த வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை இந்த மனுவில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் எனது கணவர் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட விவரங்களை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த நாளில் எனது கணவர் தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை என்றும், அணிந்து சென்றிருந்தால் இறப்பை தவிர்த்து இருக்கலாம் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருக்கு விபத்தினால் தலையில் அடிப்பட்ட காயத்தினால் தான் இறந்துவிட்டார் என முதல் தகவல் அறிக்கையிலும், சடலக்கூறாய்வு அறிக்கையிலும் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த விபத்திற்கு எனது கணவர் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியாதது இந்த விபத்திற்கு அவரும் ஒரு காரணம் என்றால் சரியல்ல. எனது கணவர் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் சாலை விதிகளை அனுசரிக்காமலும், எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமலும் சாலையை கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது கணவர் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் தான் முழுக்க முழுக்க காரணம் என்றும், அதனால் இந்த எதிர்மனுதாரர்கள் இருவரும் எவ்வித நஷ்ட ஈடு தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 3ம் மனுதாரர் இறந்து போன எனது கணவரின் வருமானத்தை நம்பி இருக்கவில்லை என்றும், 3ம் மனுதாரர் இறந்து போன நபருக்கு சட்டப்படியாக வாரிசு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாரிசு சான்றிதழும் சட்டப்படி ஏற்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் பயணம்

செய்த வாகனத்திற்கு விபத்து சமயத்தில் முறையான பதிவுச்சான்று, முறையான காப்பீடு மற்றும் முறையாக ஓட்டுநர் உரிமம் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் முறையாக ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அவர் சாலை விதிகளை அனுசரிக்காமல் சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளதால் இந்த எதிர்மனுதாரர்கள் விபத்திற்கு காரணம் இல்லை என்பதால் நஷ்ட ஈடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகமாக உள்ளது என்பதால் இந்த இழப்பீடு தொகை எங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்பதால் இந்த மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகையை எதிர்மனுதாரர்கள் செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.